11.06.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஓ.எஸ்.எண்.223/2018 ) திருமதி.வசந்தா.

2,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

1) நான் இந்த வழக்கில் 1ம்வாதி என்றால் சரிதான்.2ம்வாதி முத்துலட்சுமி எனது உடன்பிறந்தவர்என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். இந்த வழக்கின் 2முதல் 4பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தாத்தா இசக்கிமுத்து என்பவருக்குப் பாத்தியப்பட்டது என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இசக்கிமுத்து என்பவருக்கு தபசில் சொத்து எப்படி பாத்தியம் என்றால் தனித்துப்பாத்தியப்பட்டது. இசக்கிமுத்து என்பவருக்கு பெரியகருப்பசாமி, சின்னகருப்பசாமி, ஆறுமுகம் மற்றும் கன்னியம்மாள் 4வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து 24.02.2017ல் எனது தகப்பனார் 2,4 பிரதிவாதிகளுக்கு ஏற்பாட்டு ஆவணம் மூலம் தாவாச்சொத்தை பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அது முதல் 2,4 பிரதிவாதிகள் தாவாச்சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் தனித்து அனுபவம் செய்யவில்லை கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம். தாவாச்சொத்திற்கு 2,4 பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தவறு எனது தந்தை பெயரில் தான் உள்ளது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12வது வரை படித்துள்ளேன். நானும், எனது சகோதரி முத்துலட்சுமியும் கூட்டாக அனுபவம் செய்து வருதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் எனது தாத்தா சொத்து முறைப்படி உண்டு.

2) எனது நிருபண வாக்குமூலத்தில் பாரா 10ல் 1ம்பிரதிவாதிக்கு வயதாகிவிட்டதால் 2,4 பிரதிவாதிகள் சொத்தை எழுதி வாங்கிக்கொண்டு முறையாக அன்றாடம் சாப்பாடு கொடுக்காமல் ஏமாற்றிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது எதிர்கட்சி 2,3 பிரதிவாதிகள் எனது அப்பாவுக்கு பாத்தியப்பட்ட சொத்தை ஏமாற்றிவிட்டதாகத்தான் எனது கட்சி என்றால் சரிதான். எனது தந்தை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 2,4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு ஏற்பாட்டு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய மனு செய்துள்ளார். அந்த வருவாய்கோட்டாட்சிரிடம் மனு தாக்கல் செய்யும் போது எனது தந்தையுடன் நானும் சென்றியிருந்தேன் என்றால் சரிதான். அந்த வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவிவரத்தில் எனதுதந்தை அவருக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்தை 2,4

பிரதிவாதிகள் ஏமாற்றி பெற்றுவிட்டதாகசொல்லியுள்ளார் என்றால் ஆமாம். வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உத்தரவு போடப்பட்டுள்ளதா என்றால் இதுவரை இல்லை. வருவாய் கோட்டாட்சியரிடம் எந்த ஆண்டு மனுக்கொடுத்துள்ளார் என்றால் 2022 ஆம் ஆண்டு. இந்த வழக்கில் எனது தரப்பில் முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் செப்டம்பர் மாதம் 2023 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 1ம் பிரதிவாதியான எனது தந்தை இந்த வழக்கில் ஆஜராகி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எல்லாம் சரிதான் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது என்னிடம் சொல்லவில்லை. 1ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரத்தை எனது வழக்கறிஞர் என்னிடம்சொன்னாரா என்றால் ஞாபகமில்லை. எனது நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்வத்திற்கு எனது வழக்கறிஞருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். எனது நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகள் குறித்து சொல்லிவிட்டு தற்போது எதிர்கட்சி தெரியாது என்று சொல்லுகிறேன் என்றால் ஞாபகமில்லை. 21.09.1981 ல் பெரிய கருப்பசாமி கிரையம் வாங்கினார் என்றால் எனது தந்தை யாரிடமும் கிரையம் வாங்கவில்லை. தாவாச்சொத்து 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அவர் இஷ்டம் போல் யாருக்கேனும் வில்லங்க பாராதீனம் செய்ய உரிமையுள்ளது என்றும் ஆகையால் தாவாச்சொத்தில் எனக்கு எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை எந்தகாலத்திலும் வாதிகளாகிய நாங்கள் அனுபவம் செய்தது இல்லை என்றால் சரியல்ல. நான் எனது தந்தையுடன் சென்று வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்வேன் என்றால் சரிதான்.

<u>3ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> 2,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் செய்ததை ஏற்றுக்கொள்வதாக கூறியது பதிவு செய்யப்படுகிறது.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,

10.06.2025.